**நோயிலிருந்து மீள்வதற்கான கொவிட்-19 தடுப்பூசி பதிலளிப்பு செயற்திட்டம் - 2022**

---

நோயிலிருந்து மீள்வதற்கான கொவிட்-19 தடுப்பூசி பதிலளிப்பு செயற்திட்டத்தின் 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2021 யூலை 09 ஆம் திகதிய முறையே 4083-எஸ்ஆர்ஜ ஆம் இலக்க மற்றும் 4084-எஸ்ஆர்ஜ ஆம் இலக்க கடன் உடன்படிக்கைகளின் 4.02 ஆம் பிரிவிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கிணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

செயற்திட்டக் கடன் உடன்படிக்கையின் பிரகாரம், சுகாதார அமைச்சு செயற்திட்டததின் நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் செயற்திட்ட முகாமைத்துவ பிரிவுடன் இணைந்து சுகாதார அமைச்சு செயற்திட்டத்தின் அமுல்ப்படுத்தல் முகவராக உள்ளது. வழக்கமான தடுப்பூசி சேவை மற்றும் ஏனைய சுகாதார சேவைகளை விட்டுக்கொடுக்காமல் கொவிட்-19 இற்கு எதிராக இலங்கையின் முன்னுரிமை மக்களுக்கு பாதுகாப்பான தடுப்பூசி போடுவதே செயற்திட்டத்தின் நோக்கங்களாகும். கடன் உடன்படிக்கைகளின் பிரகாரம் செயற்திட்டத்தின் மொத்த மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா 32,370 மில்லியனிற்குச் சமனான ஐ.அ.டொலர் 161.85 மில்லியனானதுடன் அதில் ரூபா 30,000 மில்லியனிற்குச் சமமான ஐ.அ.டொலர் 150 மில்லியன் ஆசிய அபிவிருத்தி வங்கியால் நிதியளிக்கப்படுவதற்கு இணக்கம் காணப்பட்டது. ரூபா 2,370 மில்லியன் மிகுதி தொகை இலங்கை அரசாங்கத்தால் நிதியளிக்கப்படுவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2021 ஆகஸ்ட் 19 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2024 யூன் 30 அளவில் பூர்த்தி செய்யப்படுவதற்கு பட்டியலிட்டிருந்தது.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தி 2.1 இலட விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினை தவிர்த்து செயற்திட்டத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான செலவினக் கூற்றினையும் அதன் காசுப்பாய்ச்சல்களையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகின்றேன்.

### 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்கீட்டுக் குறைபாடு | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|
| 2013 நவம்பர் 29 ஆம் திகதிய 230/2013 ஆம் இலக்க பொதுக் கணக்குகள் சுற்றறிக்கையின் பிரகாரம் கடன்பெறுதல் கிரயம் மூலதனமாக்கப்பட வேண்டும், ஆனால் ரூபா 114.5 மில்லியன் மற்றும் ரூபா 8.3 மில்லியன் தொகையான முறையே வட்டி மற்றும் கடப்பாட்டுக் கட்டணங்கள் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | செயற்திட்ட நிர்வாகக் கையேட்டின் 15 ஆம் அட்டவணையின் பிரகாரம் 4083 இன் கீழ் வட்டி மற்றும் கடப்பாட்டுக் கட்டணங்கள் மூலதனமாக்கப்பட வேண்டியதில்லை. | பிரமாணங்களுடன் இணங்க வேண்டியதுடன் கடன்பெறுதல் கிரயம் மூலதனமாக்கப்பட வேண்டும். |

### 2.2 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களிற்கான தொடர்பு | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|
| 2019 மார்ச் 05 ஆம் திகதிய 1/2019 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் 9.3 ஆம் பிரிவு | செயற்திட்ட வழிநடாத்தல் குழு கூட்டம் குறைந்தபட்சம் இரண்டு மாதங்களுக்கு ஒரு முறை நடாத்தப்பட வேண்டும். எனினும், மீளாய்வுக் காலப்பகுதியின் போது ஒரு முறை மாத்திரமே குழுக் கூட்டம் நடாத்தப்பட்டதுடன் 13 உறுப்பினர்களில் 5 உறுப்பினர்கள் மாத்திரமே கலந்து கொண்டனர். | மீளாய்வு செய்வதற்கான நடவடிக்கைகள் எதுவும் இல்லாததால் ஒரு செயற்திட்ட வழிநடாத்தல் குழுக் கூட்டம் மாத்திரமே நடாத்தப்பட்டதுடன் பல்வேறு காரணங்களால் ஏற்பாடு செய்யப்பட்ட மேலும் ஒரு குழு கூட்டம் இரத்து செய்யப்பட வேண்டியிருந்தது. | பிரமாணங்களுடன் இணங்குதல் வேண்டும். |

## 3. பௌதீக செயலாற்றல்

### 3.1 விளைவற்ற வளங்கள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|
| ரூபா 2,499 மில்லியன் தொகையான 1,784,684 சினோபார்ம் தடுப்பூசிகள் தொற்றுநோயியல் பிரிவின் மத்திய தடுப்பூசி களஞ்சியத்தில் | கைச்சாத்திடப்பட்ட கடன் உடன்படிக்கையின் பிரகாரம் 03 டோஸ் தடுப்பூசிகள் மூலம் 04 மில்லியன் மக்களை மேவுகை செய்வதற்கு திட்டமிடப்பட்டது, ஆனால் மக்கள் எதிர்பார்த்தவாறு தடுப்பூசிக்கு | 3 தடுப்பூசிகளையும் பெற்றுக்கொள்வதற்கு மக்களை ஊக்குவிக்க வேண்டும். |

| | |
|---|---|
| களஞ்சியப்படுத்தப்பட்டிருந்ததுடன் இவை 2023 யூலை 08 முதல் 2023 ஆகஸ்ட் 24 வரையான காலத்தில் காலாவதியாகும். | முன்வரவில்லை, தடுப்பூசியின் முழு அளவையும் பயன்படுத்த முடியவில்லை. எனினும், மத்திய தடுப்பூசி களஞ்சியத்தில் மீதமுள்ள தடுப்பூசிகள் தொடர்பாக தேவையான நடவடிக்கையை எடுப்பதற்கு தொற்றுநோயியல் பிரிவின் தலைமை தொற்றுநோயியல் நிபுணருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. |

### 3.2 சர்ச்சைத் தன்மையான விடயங்கள்

| இல. | கணக்காய்வு விடயங்கள் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | செயற்றிட்ட பணிப்பாளரிற்கான வாகனத்தை வாடகைக்கு எடுப்பதற்கான ஒப்பந்த உடன்படிக்கையின் பிரகாரம் குறைந்தபட்சம் 2000 கிமீ பயன்படுத்தப்பட வேண்டியதுடன் மாதம் ஒன்றிற்கு ரூபா 155,000 படி செலுத்துவதற்கு இணங்கப்பட்டது. ஆனால் 2022 சனவரி தவிர குறைந்தபட்ச தூரம் பயன்படுத்தப்படவில்லை. | கொவிட்-19 தொற்றுநோய் காரணமாக நடமாட்டம் தடைசெய்யப்பட்டதாலும், வீட்டிலிருந்து வேலை செய்வதற்கு அனுமதித்ததாலும், செயற்திட்ட நடவடிக்கைகள் திட்டமிட்டவாறு மேற்கொள்ளப்படவில்லை. எனவே, எதிர்பார்த்த அளவு கிலோமீற்றர்கள் ஓட முடியவில்லை. | நடைமுறைச் சூழலுக்கு ஏற்றவாறு ஒப்பந்த உடன்படிக்கைகளில் உட்பிரிவுகள் சேர்க்கப்பட வேண்டும். |
| (ஆ) | கேள்வி ஆவணத்தின் சேவை நோக்கெல்லையின் பின்னிணைப்பு அ இன் பிரகாரம் வாகனம் ஒரு சாரதியுடன் வழங்கப்பட வேண்டும். டபிள்யூபி சீஏஓ-2837 இன் ஓட்ட அட்டவணையின் பிரகாரம் செயற்திட்ட பணிப்பாளர் சாரதி இல்லாமல் 3,004 கிமீ பயன்படுத்தியிருந்தமை அவதானிக்கப்பட்டது. | வாகனத்திற்கு சாரதி வழங்கப்பட்டுள்ள போதிலும் வார இறுதி நாட்களிலும் விடுமுறை நாட்களிலும் சாரதியின் சேவைகளை பெற்றுக்கொண்டால் மேலதிக படிகள் செலுத்தப்பட வேண்டியிருக்கும். செயற்திட்டம் வார இறுதி மற்றும் விடுமுறை நாட்களில் செயற்படாத போதிலும் ஒப்பந்த சேவைகளின் கீழ் பாதுகாப்பு சேவை செயற்பட்டு வந்தது. மேலும், கட்டிடத்தின் குளிரூட்டிகள் உள்ளிட்ட ஏனைய பராமரிப்பு மற்றும் திருத்தப் பணிகள் வார இறுதி மற்றும் விடுமுறை நாட்களில் மேற்கொள்ளப்படுகின்றன, மேலும் இந்த பணிகளை மேற்பார்வையிடுவதற்கு செயற்திட்ட பணிப்பாளர் அதே வாகனத்தைப் பயன்படுத்தியிருந்தார். | நடைமுறைச் சூழலுக்கு ஏற்றவாறு ஒப்பந்த உடன்படிக்கைகளில் உட்பிரிவுகள் சேர்க்கப்பட வேண்டும். |